# உப்பளத் தொழிலாளர்களுக்கான நிதியுதவித் திட்டம் விரிவாக்கப்படுமா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கோரிக்கைக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 7 -

உப்பளத் தொழிலாளர்களுக்கான நிதியுதவித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கோரிக்கை வைத்துள்ளார்.



இது தொடர்பாக ஆகஸ்டு 5 ஆம் தேதி அவர் சில கேள்விகளை எழுப்பினார்.

“இந்தியாவில் இருக்கிற உப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் உள்ள உப்பளத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த ஐந்து ஆண்டுகளில் உப்பள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மாநில மற்றும் ஆண்டு வாரியாக எவ்வளவு?

கல்விச் செலவுகள் மற்றும் பணவீக்கம் அதிகரித்து வருவதால், மேற்கூறிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் அளவை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு செய்திருக்கிறதா?

அப்படியானால், மானியத் தொகையை அதிகரிக்க அல்லது திட்டத்தின் எல்லையை விரிவுபடுத்த ஏதேனும் ஆலோசனைகள் அரசிடம் உள்ளதா? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? ” என்று கனிமொழி கருணாநிதி எம்பி. கேள்விகள் கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த பதிலில்,

“இந்தியாவில் ஆந்திரா, மேற்கு வங்காளம், ஒடிசா, தமிழ்நாடு, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய எட்டு மாநிலங்கள் உப்பு உற்பத்தி மாநிலங்களாக இருக்கின்றன.

இந்த மாநிலங்களில் உத்தேசமாக மதிப்பிடப்பட்டபடி குஜராத் மாநிலத்தில் 20 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்கள், தமிழ்நாட்டில் 15 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்கள், ராஜஸ்தானில் 15 ஆயிரம் உப்பளத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆந்திராவில் 5500 உப்பளத் தொழிலாளர்களும் மற்ற மாநிலங்களில் 2 ஆயிரம் அதற்கும் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

*Grant of Rewards to the Children of Salt Labourers* என்கிற 'உப்பளத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வெகுமதிகள் வழங்கும்' திட்டத்தின் கீழ், உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலமாக மேற்கண்ட உப்பு உற்பத்தி செய்கிற எட்டு மாநிலங்களிலும் 2021-22 நிதியாண்டில் 2009 பேர், 2022-23 நிதியாண்டில் 1657 பேர், 2023-24 நிதியாண்டில் 1896 பேர், 2024-25 இல் 1573 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக 15 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்களைப் பெற்றுள்ள தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 2021-22 இல் 290 பேரும், 2022-23 இல் 373 பேரும், 2023-24 இல் 623 பேரும், 2024-25 நிதியாண்டில் 438 பேரும் என உப்பளத் தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியின் அளவு பற்றிய மதிப்பாய்வு ஏதும் அரசால் செய்யப்படவில்லை. அதனால், உப்பளத் தொழிலாளர்களுக்கு உதவும் திட்டம் விரிவு படுத்தும் திட்டம் இல்லை” என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

### பால் உற்பத்தியை அதிகரிக்க

# 6084 பால் கூட்டுறவு சங்கச் செயலாளர்களுடன் கலந்துரையாடல்!

## விற்பனையாளர்களுக்கு – அமைச்சர் மனோ தங்கராஜ் பணி நியமன ஆணைகள் வழங்கினார்!

சென்னை, ஆக. 7 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களால் நேற்று முன்தினம் (5.8.2025) பால் உற்பத்தியை அதிகரிக்க 6084 பால் கூட்டுறவு சங்க செயலாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக கலந்துரையாடியதுடன், ஆவின் முகவர்களுக்கு உறைகலன், ஆவின் பாலகங்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டது.

சென்னை முழுவதும் நாளொன்றுக்கு சுமார் 15 இலட்சம் லிட்டர் பால் மற்றும் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.30 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள், 35 ஆவின் ஜங்சன் பாலகங்கள், 200 ஆவின் பாலகங்கள் மற்றும் சுமார் 860 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்கள் மற்றும் குழந்தைகளைக் கவரும் வகையில் சென்னை மாநகரிலுள்ள 21 ஆவின் ஜங்சன் பாலகங்கள் புனரமைக்க திட்டமிடப் பட்டு முதற்கட்டமாக 12 பாலகங்களில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்க பல்வேறு விற்பனை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் சென்னையில் பால் உப பொருட்கள் விற்பனை கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஜூலை மாதம் சுமார் 30% அதிகரித்துள்ளது.

மே 2025-இல் ரூ.29 கோடி, ஜூன் 2025-இல் ரூ.30.30 கோடி மற்றும் ஜூலை 2025-இல் ரூ.32.35 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள் விற்பனை நடைபெற்றுள்ளது. இவ்விற்பனையானது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் புதிய உச்சத்தை அடைந்துள்ளது என பால்வளத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் 2025-2026 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பால்வளத் துறை மானியக் கோரிக்கையில் பால்வளத்துறை அமைச்சர் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை அதிகரிக்க ரூபாய் 210 இலட்சம் மதிப்பீட்டில் 600 குளிர்சாதன பெட்டிகள் வழங்கப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில் முதற்கட்டமாக 60 எண்ணிக்கையிலான உறைகலன்கள் கொள்முதல் செய்து 21.05.2025 அன்று வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (5.8.2025) பால்வளத் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய தாக 5 நபர்களுக்கு ஆவின் பால் மொத்த விற்பனையாளர்களுக்கான நியமன ஆணைகளையும், 5 நபர்களுக்கு ஆவின் பாலகங்களுக்கான நியமன ஆணைகளையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒரு நபருக்கு தட்டச்சர் நியமன ஆணையும், ஒரு நபருக்கு பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தையும், பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, இரண்டாம் கட்டமாக கொள்முதல் செய்யப்பட்ட 60 எண்ணிக்கையிலான உறைகலன்களை ஆவின் முகவர்களுக்கும் வழங்கினார்.

தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 6084 சங்க செயலாளர்கள் உடன் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வங்கி கடன் உதவி பெற்று வழங்குவது, அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும் பொருளாதாரத்தில் நிலைத்த தன்மையுடைய சங்கங்களாக உருவாக்குவது மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை பல்வேறு சேவை மையங்களாக மாற்றுவது அகியவை குறித்து பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க செயலாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க செயலாளர்களின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் பால் கொள்முதல் அதிகரிப்பதற்கான உத்திகள், புதிய உறுப்பினர் சேர்க்கை, பால் உற்பத்தியாளர்களுக்கு தங்கு தடையின்றி பால் பணப்பட்டுவாடா செய்தல், ரூ.3/- ஊக்கத்தொகை வழங்குதல், 100% நிகழிட ஒப்புகை வழங்குதல், கறவை மாடுகளுக்கு சரிவிகித உணவு வழங்குதல், கறவை இனங்களுக்கு உரிய இடைவெளியில் செயற்கை முறை கருவூட்டல் செய்தல் ஆகியவை குறித்து துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, அரசு செயலாளர், மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆவின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மொத்த விற்பனையா ளர்கள் கலந்து கொண்டனர்.

---

### அமைச்சர் ஆர். ராஜேந்திரன் – மேயர் அ.ராமச்சந்திரன் – ரெ.தங்கம் பங்கேற்பு!

# சேலம் அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு விழா - நல உதவிகள்!

## நிகழ்ச்சி ஏற்பாடு: அறக்கட்டளை நிர்வாக தலைவர் பி.மணிகண்டன்!

சேலம், ஆக. 7 -

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் பிரதிநிதித்துவம் வழங்கியதுடன், ஏராளமான வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் சேலம் அன்பின் கரங்கள் அறக்கட்டளை சார்பாக நேற்று 6.8.2025 புதன்கிழமை காலை 10 மணி அளவில் சேலம்,கோட்டை சூசன் அம்மாள் கல்யாண மண்டத்தில் அறக்கட்டளையின் நிர்வாக தலைவர் பி. மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் சேலம் மாநகராட்சி மேயர் அ.ராமச்சந்திரன், கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவர் ரெ.தங்கம் ஆகியோர் பங்கேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் பொற்கால ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு கொண்டு வந்த பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை குறித்தும், அதன் பயன்பாட்டு குறித்தும் எடுத்துரைப்பதுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் சார்பாக நன்றி தெரிவித்து வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவில், கோட்டை பகுதி கழக செயலாளர் சையது இப்ராஹிம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் பி.செண்பக வல்லி, ஜென்னிஸ் கல்வி அறக்கட்டளை தலைவர் டாக்டர் கே.கர்லின் எபி, கமலம் மறுவாழ்வு மையம் மற்றும் எம்மீஸ் சிறப்பு பள்ளி தாளாளர் ஹேமா பிரைட், சேலம் மாவட்ட உதவிக்கரம் மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வு சங்கத் தலைவர் டாக்டர் பி.அத்தியண்ணா, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச்செயலாளர் என். அம்பாள் குமார், டாக்டர் ஜி.ராஜசேகரன் எம்டி.,

பேராசிரியர் (முனைவர்) தா.ஜாகிர் உசேன், மாவட்ட முதன்மை அலுவலர் பி. சந்திரசேகர், சி. மணிகண்டன் சிஎஸ்ஆர், டாக்டர் பி. காயத்ரி, வெ.சரவண குமார் ஜெஈஓ, டாக்டர் மாலினி, டாக்டர் சந்திரசேகர், ஆசிரியர் க.ஷீருன், இம்மானுவேல் சார்லஸ், எம்.ஒய்.முகமது காசிம்,

சி.சஸ்டின்ராஜ், பி. டேவிட் ராஜன், அலெக்ஸ், ஜி.ராஜ்குமார், டி.சியாம் எபினேசர், வெற்றிவேல் பிரகாஷ், ஹபித், ஜெ. எபி இன்பகுமார் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்க ளும், சமூக ஆர்வலர்களும் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

அன்பின் கரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகளான: எ.ரவி தங்கதுரை, சி.சின்ன ராஜா - சூர்யா, என்.ஷாம் சுந்தர் ஆகியோர் விழா ஏற்பாடு செய்கின்றனர். முன்னதாக சி.சின்னராஜா - சூர்யா வரவேற்புரை ஆற்றினர்.

விழா நிறைவில் அன்பின் கரங்கள் அறக்கட்டளை பொருளாளர் சி. விஜயகுமார் நன்றியுரையாற்றினர்.

---

### காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம்

# எடமிச்சி ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

## அமைச்சர் ஆர்.காந்தி – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மனுக்கள் பெற்றனர்

காஞ்சிபுரம், ஆக. 7 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம் எடமிச்சி ஊராட்சியில் ‘ உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் அமைச்சர் ஆர். காந்தி - மவாட்டச் செயலாளர் க.சுந்தர் மனுக்கள் பெற்றனர். இந்த முகாமிற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யா சக்திவேல், தேன்மொழி மணி, கார்த்திகேயன், பாலு, பன்னீர்செல்வம், துணைத் தலைவர் ஆனந்தன், ஆகியோர் முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார், ஊராட்சி மன்ற தலைவர் தர்மராஜ் ஆகியோர் அனைவரும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார்.

---

# நமது நினைவெலாம் கலைஞரே அன்றோ!



இன்று (7.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள்! உலகத் தமிழர்கள் அனைவரும் உறக்கம் தெளிந்து, எழுச்சி பெற்று ஏற்றம் பெறவும், தாயகமாம் தமிழ்நாட்டை, தம்சிந்தனை சொல் செயல் கொண்டு,கண்ணையும் கருத்தையும் கவரும் சீரிய சிற்பமாகச் செதுக்கிடவும், ஓய்வே இன்றி உழைத்த உத்தமராம் கலைஞரின் ஏழாவது ஆண்டு நினைவுநாள்!

திராவிடராகிய நம்மால், கலைஞரை மறக்க முடியுமா? **“நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா”**என்று பாடினார் கவியரசர் கண்ணதாசன். நமக்கு, கலைஞரை என்றும் நினைக்க மட்டுமே தெரியும், ஒரு கணமேனும் மறந்திடக் கூடுமோ! எதைப் படித்தாலும்,எதைக் கேட்டாலும், அவரது நினைவன்றோ நமக்குள் மையம் கொண்டு, நம்மை ஆட்கொள்ளுகின்றது!

**நினைவுகள் என்பது நாம் நம்முடன் எடுத்துச் செல்லும் நாட் குறிப்பு ( Memory is the diary that we all carry about with us) என்று ஆங்கிலக் கவிஞர் ஆஸ்கர் ஒயில்டு குறிப்பிட்டிருக்கிறார். திராவிட இயக்கத்திலுள்ள நம்மைப் பொறுத்தவரை, கலைஞரைப் பற்றிய நினைவுகளே, நம் வாழ்க்கையின் நாட்குறிப்புகளாக மட்டுமின்றி,**

**நம்மை வழி நடத்தும் துருவ நட்சத்திரங்களும் ஆகும்; அவை தான் நமது பாதையைத் தெளிவாக்கி, பயணத்தைத் தீர்மானிக்கும் ஒளியாகும்.கலைஞரைப் பற்றிய நம் நினைவுகள், கண்ணுக்குள் காட்சிகளாக விரிபவை, அவை நம் இதயத்தின் துடிப்புகள் - இதயத்தின் விலை மதிப்பற்ற கருவூலங்கள், வைரங்கள். நமக்குக் கலைஞரைப் பற்றிய நினைவுகள் காலத்தின் தேவை, இன்றைய நமது நம்பிக்கைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் நனி சிறந்த ஊட்டச் சத்து அவை.**

1938 – ஆம் ஆண்டு 14 வயது பால பருவத்திலேயே, திருவாரூர்த் தெருக்களில், நாள் தோறும் கையில் தமிழ்க் கொடி ஏந்தி, மாணவர் ஊர்வலம் நடத்தி, **“வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்! வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்”** என்று என்றைக்குக் குரல் எழுப்பினாரோ, அன்று முதலே அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகி விட்டது.அது 80 ஆண்டுகள், இறுதிவரை எதற்கும் அஞ்சாத நெஞ்சினராக, போராளியாக நீடித்தது( Started as a Fighter and lasted as such till the end ). அது மட்டுமல்ல, அப்போதே அவருள் துடிக்கத் தொடங்கிய கவிதை உணர்ச்சி ( Powerful Poetic Emotions ) கடைசி வரை விறுவிறுப்பாக வளர்ந்து மேலோங்கியது.

15 வயதிலேயே **‘மாணவ நேசன்’** எனும் கையெழுத்து ஏடு, அடுத்து **‘முரசொலி’** துண்டு வெளியீடு எனத் தொடங்கியதுதான், கலைஞரின் பத்திரிகை வாழ்க்கை (Life as a Journalist). அது இறுதி மூச்சுவரை துவளாமல் இயங்கியது. அந்த வாழ்க்கையிலும், **“தென்றலைத் தீண்டியதில்லை, தீயைத் தாண்டியிருக்கிறேன்”** என்பதற்கேற்ப, எத்தனையோ சோதனைகளைச் சந்தித்தே வந்திருக்கிறார்.

கலைஞர் 15 வயதில் காதில் வாங்கிக் கொண்ட **“சுதந்திரம் – சமாதானம் – சமத்துவம்”** என்ற சுடர்விடும் சொற்கள், அவருக்குள்ளே சாத்தியப் படுத்தக் கூடிய சித்தாந்தப் பரிமாணங்களைப் பக்குவமாக ஊன்றி வைத்தன. அவற்றின் வெளிப்பாடுதான், அவர் முதலமைச்சராக இருந்த போது நடைமுறைப்படுத்திய திட்டங்கள்.

தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம், கைம்பெண்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம், மிகப் பிற்படுத்தப்பட்டோர்க்குத் தனி இட ஒதுக்கீடு, குடிமனை அனுபோகதாரர் சட்டம், குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம பங்குரிமை என எண்ணற்ற திட்டங்களை வரிசைப் படுத்திச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**கலைஞர்,செயலாக்கத்திற்கு அறிமுகம் செய்த திட்டங்களுள், அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டியது,இந்திய சுதந்திரப் பொன்விழாவினை யொட்டிச் செயல்படுத்திய ‘பெரியார் நினைவு சமத்துவபுரம்’ திட்டமாகும். விவேகம் எனும் வெள்ளி முளைத்து, சாதி சமயப் பிணக்குகள் எனும் சனி தொலைந்தால்தான், சமுதாய மக்களிடையே நல்லிணக்கம் – சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும் என்ற உறுதியுடன் அந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.**

17 வயதிலேயே ‘**தமிழ் மாணவர் மன்றம்**’ என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.1942ல் மன்றத்தின் ஆண்டு விழாவினை,

**“கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம் !**

**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை”** என்று பாவேந்தர் பாரதிதாசனார் உணர்ச்சி ததும்பிடப் போற்றும் வண்ணம் நடத்தினார்.இதற்கிடையே தஞ்சை மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் தமிழ் மாணவர் மன்றங்களை நிறுவிடப் பணியாற்றினார் கலைஞர்.இயல்பிலேயே வாய்த்திடப் பெற்ற அந்த அரிய அமைப்புத் திறன்தான் (Organising Talent) வளர்ந்து வனப்புற்று, இயக்கத்தில் பல்வேறு உயர்ந்த பொறுப்புகள் அவரை நாடி வரச்செய்தது.

நாடகத்தில்தான் தொடங்கியது கலைஞரின் கலை வாழ்க்கை ( Life as an artiste ).**’நச்சுக் கோப்பை’** என்ற நாடகமே, கலைஞர் எழுதி நடித்த முதல் நாடகம். அவரது 19 வயதில் 1943ல் அரங்கேற்றப்பட்டது.திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கமாக அமைந்திருந்தது இந்த நாடகம். சோதிட மறுப்பு, கைம்மைத் திருமணம், சாதி வேறுபாடின்மை, பகுத்தறிவு போன்ற உயர்ந்த இலட்சியங்கள் இடம் பெற்றிருந்தன.

**“ஏ பணமே! பகல் இரவு என்று பாராது பாடுபட்டுப் பசி பசி என்று ஏங்கி நடுநிசியிலே நின்றாலும், இதோ கொஞ்சம் புசி புசி என்று கூறிடாத இரும்பு நெஞ்சரின் இரும்புப் பெட்டியில் தூங்கும் பணமே ! குச்சி வீட்டில் ஏழை உணவின்றி ஓய்ந்து கிடக்கவும், மச்சு வீட்டில் பணக்காரர்கள் மதுரகீதம் பாடவும் பாழும் நிலையை உண்டாக்கிய பணமே ! உலகத்தின் உயிரே! இன்னும் எத்தனை நாளைக்கு இந்தச் சோம்பேறிகளின் வீட்டில் வாழப் போகிறாய்? வரப் போகிறது பாட்டாளியின் படையெடுப்பு!”** என்று 19 வயதில் கலைஞர் எழுதிய எரி நெருப்பு வசனத்தைப் படித்தாலும், பக்கம் நின்று கேட்டாலும், நம் நினைவிலே சூடு தணியாமல் என்றும் நிற்கும்தானே !

தமிழ்நாட்டின் முக்கிய சமுதாயங்களை நினைவு படுத்திப்போற்றிடும் வகையில் கலைஞரால் பொன்னிழை கொண்டு நெய்யப் பட்டவையே, **தென் பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர், பாயும்புலி பண்டாரக வன்னியன்** எனும் மூன்று வரலாற்று நெடுங் கதைகள். தமிழ்ச் சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகவும், புத்தெழுச்சிக்காகவும் அவற்றைப் படைத்தார்.

**“புலிப் போத்து மறவர்களே! நீங்கள் பிளவு படாதிருந்தால் அயலவர் நம்மை ஆண்டிடவும்,தமிழர் பலர் அடிமையாகி மாண்டிடவும் நேர்ந்திருக்குமா?”** என்ற வினாவை முக்குலத்தின் எஃகு நெஞ்சில் எழுதிட கலைஞர் முற்பட்டதனால் விளைந்தது ‘தென்பாண்டிச் சிங்கம்’.

**கொங்கு மக்களிடையே, பொன்னர் சங்கர் கதை என்றும், அண்ணன்மார் சாமி கதை என்றும் உலவிக் கொண்டிருந்த புராணத் தன்மையுள்ள நாட்டுப்புறக் கதையைக் கருவாக வைத்து, ‘ பொன்னர் சங்கர் ‘ என்ற வீர வரலாற்றைப் படைத்திருக்கிறார் கலைஞர்.**

தமிழ் ஈழத்தின் வன்னிப் பகுதியில் வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கமிட்ட மாவீரன் பண்டாரக வன்னியனுக்கு, இலங்கைத் தமிழர் சிலை நிறுவிப் போற்றினர்.அந்த விழாவுக்கு வாழ்த்து அனுப்பிய கலைஞர், ‘**கற்சிலை அங்கே கண்டனர், நான் சொற்சிலை இங்கே காண்கிறேன்**’ என்று சொல்லிவிட்டு, உருவாக்கிய உன்னதப் படைப்பே ‘ பாயும் புலி பண்டாரக வன்னியன்’.

கலைஞரின் இந்த மூன்று உரைநடைக் காவியங்களையும், எழிலோவியக் காட்சிகளையும், **‘ரோமாபுரிப் பாண்டியன்’** எனும் நெடுங்கதையையும், எளிதில் நம் நெஞ்சத்தின் ஓரத்திலேயே எப்போதும் நிறுத்திவிட முடியுமா ?

**“நான் எட்டாத பழம்”** என்ற ராஜகுமாரியிடம், ஒருதலைக் காதல் கொண்ட ஆலகாலன், **“வெட்டும் கத்தி நான்”** என்று பதில் சொல்ல, **“வைரக் கத்தியாகவே இருக்கலாம்.அதற்காக வயிற்றில் குத்திக் கொள்ள மாட்டார்கள்”** என்ற **‘ராஜகுமாரி’** முதல் திரைப்பட வசனத்திலிருந்து தொடங்கி; அபிமன்யு, மந்திரி குமாரி, பராசக்தி, மனோகரா உள்ளிட்ட கலைஞர் எழுதிய, 75க்கும் மேலான திரைப்படங்களின் வசனங்களும்;

**“உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை மனிதனோடு இயற்கையாகப் பிறப்பதல்ல.எல்லா வர்க்கத்தினரையும் சேர்ந்த இளைய தலைமுறையினர் நினைத்தால் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது எளிதான காரியமாகும்”**என்ற மு.க.ஸ்டாலின் நந்தகுமாராக நடித்த **‘ஒரே ரத்தம்’** திரைப்படத்தின் கடைசி உரையும்;

**“பிறர்க்காக வாழும் நல்லிதயம் கொண்டவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டவர்களே எம்மைச் சேர்ந்தவர்கள்”** என்று மதத்தில் **புரட்சி செய்த மகான் இராமானுஜர்** கூறுவதாக, கலைஞர் அமைத்திருக்கும் நல்லுரையும்; நம்மில் யாரும் மறக்கக் கூடியவை அல்ல.

கலைஞரின் எழுத்தும்,பேச்சும்,நிர்வாகத் திட்டச்செயல்பாடுகளும், இயக்கத்தின் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டும், கலை இலக்கிய நயத்துடன் அவற்றைப் பொது மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் இருந்தன என்பது, நமது நினைவில் என்றைக்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்!

**இன்றைய ‘திராவிட மாடல்’ ஆட்சியின் தலைவர், திராவிடச் செம்மல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓய்வறியாத உழைப்பின் நீண்ட நெடிய பயணமும், திட்டங்களின் நேர்த்தியும், செயல் ஊக்கமும், கட்சியின் மீதும், கட்சியினர் மீதும் அவர் கொண்டுள்ள கவனமும், காட்டும் அக்கறையும்,அவர் கலைஞரின் நீட்சி என்று மெய்ப்பித்து வருவதை மறக்க முடியுமா!**

• • •

**கி.இராஜமாணிக்கம்**

• • •